# வேட்டி

வேட்டி கட்டிக் கொள்ள ஆசை
மீசை முளைக்காத
அரைக்கால் சட்டைப் பருவம்;

கட்டிக் கொண்டு விட்டோம் என்ற
குறுகுறு சந்தோஷம் பாதி
இழுத்துப் பிடித்து இறுக்கிக் கட்டினாலும்
எங்கே அவிழ்ந்து விடுமோ என்ற
பயம் பாதி என - அன்பாயும்
அரும்பு மீசைப் பருவம்;

கட்டுமானம் பழகிப் போய் - வேட்டியை
லாவகமாய் மடித்துக் கட்டும் வீச்சில்
இளசுகளின் மனசை வாரிச் செல்லும்
வாலிபப் பருவம்;

பார்க்கப் பளிச்சென்று
மாலையும் கழுத்துமாய், பூக்களின் மத்தியில்
புன் முறுவல் பொட்டுடன்
வெண்பட்டு வேட்டியில்
கல்யாணக் கோலம்;

வயது, குடும்பம், சமுதாயம், அந்தஸ்து
யாவைக்கும் என்றும் அடையாளமாய்
அங்கீகாரமாய் - தழையத் தழைய
வெள்ளை வெளேர் வேட்டி...

அ. சொ
பெங்களூர்
27 ஜூலை 2011.